திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, அரசாங்க வக்கீல் அரசாஙகத்திற்கு விரோதமாகச் சொல்லி சம்பளம் வாங்கலாமா, நாம் கொடுக்கலாமா?

1. தகவல் கோரல் — (தொடர்ச்சி).

(ஆ) உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவிகிதம் எனவும், பெண்களுக்கு 15 சதவிகிதம் எனவும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த இட ஒதுக்கீடு செய்யப்பட்டபடி தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற முயற்சி எடுக்கும்போது உச்ச நீதி மன்றத்தில் தடை ஆணை வழங்கப்பட்டது. விதட்ரா செய்யப்பட்டு இருக்கிறது. எனவே இப்போது நடைபெற்றிருக்கின்ற ஊராட்சி, நகராட்சி தேர்தல் பழைய அடிப்படையில் நடைபெற்றிருக்கிறது. புதிய முறைப்படி வழங்கலாம், அது நியாயம் என்று உச்ச நீதிமன்றத்தில் உள்ள தடை ஆணை வாபஸ் பெற பெற்றதால் ஏற்கனவே நடைபெற்றிருக்கின்ற தேர்தல் செல்லுமா? அதனுடைய விவரம் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு பெரிய சட்டப் பிரச்சனை.

2. அறிக்கைகள் அளித்தல் — தொடர்ச்சி).

(ஆ) விதி 111-ன் கீழ் தம் வீட்டில் வருமான வரி அதிகாரிகள் அல்லது சி.பி.ஐ. சோதனை செய்தார்சள் என்ற செய்தியை மறுத்து சட்ட அமைச்சர் விடுத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கே I present a statement under Rule 111 on a of public importance.

நாட்டுடமையாக்கப்பட்ட ஒரு வங்கியில் வருமானவரி அதிகாரிகள் அல்லது சி.பி.ஐ. சோதனை நடத்தியபோது எனது பெயரிலோ அல்லது என் தொடர்பாகவோ 1½ கோடி ரூபாய்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS